[11th March 1966

திரு. மு. பொ. வடிவேல் : இப்போது பஞ்சாயத்து யூனியன் ஸ்கூல்ஸ் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. போதுமான அவகாசம் கொடுத்தும் டெப்டி இன்ஸ்பெக்டர் வருவதில்லை. அதனுல் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க சிரமமாக இருக்கிறது. இந்நிலையைப் போக்க ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விஷயத்தில் தாமதம் இன்றி கவனிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* 256 கேள்வி.—**திரு. சா. ராமசாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதிய உணவுக்கான பொறுப்புகளை ஆசிரியர்களிடமிருந்து மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. சா. ராமசாமி : அரசாங்க மான்யம் 6 பைசாவும், பஞ்சாயத்து மூலம் இரண்டு பைசாவும், மக்கள் பங்குத்தொகை இரண்டு பைசாவும் வசூலிக்கும் நிலை இருக்கிறது. சில பஞ்சாயத்துக்களில் இந்த இரண்டு பைசா கொடுக்கப்படுவதில்லை. மக்கள் பங்குத் தொகையை வசூலிக்க தலைமை ஆசிரியர் அல்லது ஓராசிரியர் பள்ளியாக இருந்தால் அந்த ஆசிரியரின் பாதி நேரமும் பணம் வசூலிப்பதிலும், மதிய உணவு சமைப்பதிலும் போய்விடுகிறது. இதனுல் கல்வியின் தரம் கெடுகிறது. ஆகவே, அரசாங்கம் பூராப் பணத்தையும் கொடுத்து நலப் பள்ளிகளில் செய்வது மாதிரி மதிய உணவு தயார் செய்வதை காண்ட்ராக்ட் மூலம் விட்டுவிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆறு பைசா கொடுப்பதே இப்போது 212 லட்சம் ரூபாய் ஆகிறது. அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கு மேலும் அரசாங்கம் கொடுப்பதற்கு நிதிநிலை அனுமதிக்காது. கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்கு மதிய உணவு சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிற்கு பஞ்சாயத்து போர்டு தலைவரே தலைவராக நியமிக்கப் படுகிறுர்கள். பஞ்சாயத்து தலைவருக்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது. அதை அவர்கள் உணர வேண்டும். உணர்ந்து கொஞ்சம் வேலை செய்து இந்த 2 பைசாவை வசூல் செய்வதற்கு முற்படவேண்டும். அப்படி அவர்கள் செய்வார்களானுல் ஆசிரியர்களுக்கு தொல்லை இராது.

திரு. மு. பொ. வடிவேல் : மதிய உணவு வழங்கும் இடங்களில், பள்ளிகளில் செய்யப்படுவதால் பள்ளிகளில் ஏராளமான இடவசதி இல்லாத காரணத்தினுல் சிலயிடங்களில் பள்ளிகள் வீணுக்கப்படுகிறது. ஆகவே மதிய உணவு செய்வதற்கென்று தனியாக ஒரு ஷெட் போட வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மதிய உணவு செய்வதற்கு தனியாக இடவசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அது வலியுறுத்தப்பட்டு வருகிறது.

11th March 1966]

அதுமாதிரி சமையல் செய்வதற்கும் ஒருவரை நியமிக்கவேண்டு மென்றும் வற்புறுத்தி வருகிறது. தொடர்ந்து எல்லாம் சீராக நடை பெற பஞ்சாயத்து தலைவர்கள் அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதிய உணவு அளிக்கிற பொறுப்பு பஞ்சாயத்துத் தலைவரைச் சார்ந்தது என்று சொன்னார்கள். அந்தத் தலைவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படுகிற தகராறு காரணமாக சில பள்ளிகளில் மதிய உணவு போடப்படாமல் நிறுத் தப்பட்டிருக்கிறது. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் பொறுப்பு முழுவதும் பஞ்சாயத்து தலைவருக்கு என்று நான் சொல்லவில்லை. ஆனால், என் விருப்பம் அது. பஞ்சாயத்து தலைவர்கள் அந்தப் பொறுப் புணர்ச்சியை உணர வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். ஆசிரியர் களுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் தகராறு என்றால் அதனால் சாப்பாடு இல்லாமல் பள்ளிகள் பாதிக்கப்படுகிறது என்றால் அது வேறு விஷயம். ஆசிரியர்களுக்கும் தலைவர்களுக்கும் தகராறு என்றால் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் சொல்லி பரிகாரம் தேடிக் கொள்ளவேண்டும்.

திரு. எஸ். ஜே. சாமசாமி : தலைவர் அவர்களே, இந்த மதிய உணவானது தயாரிக்கின்ற முறையைப்பார்த்தால், ஒரு வாத்தியார் 10 மணிக்கு மேல் பாடம் ஒன்றும் சொல்லிக்கொடுக்காமல் அடுப்பங் கரையில் போய் தான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையை மாற்றுகின்ற முறையில் ஏதாவது காண்டிராக்ட் முறையில் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் இப்படிப்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுத்துவருவதை நல்ல திட்டம் என்று ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆனால், இதை எப்படி நல்ல முறையில் செயல்படுத்துவது என்பதற்கு யோசனைகள் சொன்னால் அதைப் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. இதனுடைய அடிப்படையை ஒப்புக்கொண்டால், இதை எப்படி நல்ல முறையில் நடத்துவது என்பதற்கு பரிகாரம் காணலாம். காண்டிராக்ட் என்பது சிறந்த பரிகாரமாக இருக்க முடியாது. அப்படி வந்துவிட்டால் இப்போது கொடுக்கப்படும் 10 பைசாவில் இரண்டு பைசா போய்விடும். இதை பஞ்சாயத்து யூனியன் தலைவர் கள், பஞ்சாயத்து தலைவர்கள், ஆசிரியர்கள் இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்யவேண்டும். அதற்காக ஆசிரியர்கள் பாடம் சொல்லிக்கொடுக்காமல் இதில் ஈடுபடவேண்டும் என்று சொல்ல வில்லை. அதே நேரத்தில் பட்டினியோடு குழந்தைகள் இருந்தால் என்ன சொல்லிக்கொடுத்தாலும் அவர்கள் மனதில் ஏறாது. இதை யெல்லாம் கருத்திற்கொண்டு எந்த முறையில் சரியாகச் செய்ய லாம் என்பதை அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டு வருகிறது.

இதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஏதாவது யோசனைகள் சொன்னாலும் அதைப் பற்றியும் பரிசீலிக்கலாம்.

திரு. மு. பொ. வடிவேல் : மதிய உணவுக்காகக் கொடுக்கப்படும் செக் பஞ்சாயத்து யூனியனிலிருந்து நேரடியாக ஆசிரியர்களுக்குப் போய்விடுகிறது. பஞ்சாயத்து தலைவர்களுக்கு தெரிவதில்லை. பஞ்சாயத்து தலைவரோடு கலந்து தெரிந்து கொள்ளுகின்ற முறையில் இந்தப் பணம் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இதைப்பற்றி முன்பே கூறியிருக்கிறேன். பஞ்சாயத்து தலைவர்களே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்கள் மூலமாக பணம் கொடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அங்கங்கே இருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் இதில் எந்தவிதமான புகார்களுக்கும் இடமில்லாமல் கவனித்துக்கொள்ளவேண்டும். இதற்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவ்விதம் ஏற்றுகொள்வார்களேயானால் இதற்கான பணத்தை அவர்கள் மூலமாகக் கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, மதிய உணவு திட்டம் மிகச் சிறந்த திட்டம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏழைக் குழந்தைகளுக்கு இது மிகவும் அவசியம் தான். ஆனால் ஒரு சில பஞ்சாயத்துக்களில் தாங்கள் கொடுக்க வேண்டிய இரண்டு பைசாவையும் சரியாகக் கொடுக்காத நிலை இருக்கிறது. இதன் காரணமாக சர்க்கார் கொடுக்கின்ற ஆறு பைசாவையும் வாங்கிக்கொண்டும், குழந்தைகளுக்கு உணவு கொடுக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த உத்தரவை மாற்றி, மின்சாரக்கட்டணத்தை பஞ்சாயத்து யூனியனிலிருந்து கொடுத்து விட்டு, அந்த பஞ்சாயத்து நிதியிலிருந்து வசூலிப்பது போல், மதிய உணவுத் திட்டத்திற்காகவும் மொத்தமாக சர்க்காரே வசூலித்துக்கொண்டு, சர்க்காரிலிருந்தே செலவு செய்வதற்கு சர்க்கார் ஏதாவது சட்டம் பிறப்பிக்க முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சில கிராமங்களில் 10 பைசா அளவுக்கு கிடைப்பதில்லை என்று சொல்லி சரியானபடி சாப்பாடு போடுவதில்லை என்ற புகார்கள் எனக்கும் வந்திருக்கின்றன. எனக்கு அதில் மிகுந்த கவலை உண்டு. இதற்கு என்ன பரிகாரம் செய்வது என்பது தான் ஆலோசிக்கவேண்டும். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது ஒரு பரிகாரம். ஆனால், பஞ்சாயத்துக்களிலிருந்து சர்க்கார் வசூல் செய்யப்போனால் எங்களிடம் பணம் எங்கேயிருக்கிறது ? என்று சொல்லக்கூடும். எப்படியும் அந்த கிராமத்திலே 2 பைசா வசூலிக்கவேண்டும். இதற்காக ஆலோசனைக் குழுவில் ஒரு ஆலோசனையை நானும் கூறியிருக்கிறேன். பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் ஒப்புக் கொள்ளுமானால், இவ்விதம் தனியாக இரண்டு பைசாவை வசூல்

11th March 1966]

செய்ய முடியவில்லை என்றால், இரண்டு பைசாவை கிராமத்தில் எல்லோரிடமிருந்தும் வசூல் செய்வதற்கு சட்டம் செய்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, கிராமப் பொது மக்களிடமிருந்து இரண்டு பைசா அளவுக்கு ஆசிரியர்களால் வசூல் செய்வது கஷ்டமாக இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். நான் சொல்லவிரும்புவது, பஞ்சாயத்துக்களில் அங்கங்கே பல புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் சேர்மேன், பஞ்சாயத்துத் தலைவர்கள் இவர்கள் ஒன்று கூடி இதைப்பற்றி ஆலோசித்து, எந்தெந்த நிலங்களை மதிய உணவுக்காக பயிரிடுவதற்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதை தேர்ந்தெடுத்து, அதற்குக் கிணறு வெட்டி, சாகுபடி செய்வதற்கான வசதிகளையும் செய்து கொடுத்துவிட்டால், பொதுமக்களுடைய உதவி இல்லாமலேயே இந்தத் திட்டத்தை சரியாக நடத்தலாம். இன்னொன்று, அறுவடைக் காலங்களில் களங்களில் சென்று இதற்கென்று உதவி செய்யவேண்டும் என்று கேட்டால், எல்லோரும் தான்யங்களை தருவார்கள். இதைப் பெற்றுக்கொண்டு சரியான முறையில் நடத்தலாம். இந்த இரண்டு வித யோசனைகளையும் சட்டமன்ற உறுப்பினர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும் ஏற்றுக்கொள்வார்களென்று நம்புகிறேன். ஆகவே, இதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகள் நல்ல யோசனைகள் தான். நான் வேறு ஒன்றைக் கூற விரும்புகிறேன். இதை சில கிராமங்களில் நிறைவேற்றி வருகிறார்கள். கிராமங்களில் பள்ளிக்கென்று பூதான இயக்கத்தை தோற்றுவிப்பது. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் குறைந்தது 5 ஏக்கர் அளவுக்கு கொடுக்கலாம். ஒவ்வொருவரும் அரை ஏக்கர் வீதம் கொடுக்கலாம். அரை ஏக்கரை இதற்காக பரிவர்த்தனை செய்து வாங்கி மொத்தம் ஐந்து ஏக்கர்களை ஒரு ஹோல்டிங் ஆக வைத்துக்கொள்ளலாம். அதைப் பஞ்சாயத்திலிருந்தே சாகுபடி செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். அப்போது யாருடைய தயவையும் எதிர்பாராமல் இந்தத் திட்டத்தை நடத்தலாம். புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன, அவற்றை உபயோகப்படுத்தலாம் என்பது வேறு விஷயம். இது கூட எங்கெங்கு முடியுமோ அந்த இடங்களில் எல்லாம் அரை ஏக்கர் வீதம் கொடுக்க யாரும் தயங்க மாட்டார்கள். இவ்வாறு ஐந்து ஏக்கர் வரை சேர்த்து வைத்துக்கொண்டால் எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாது. இவ்வாறு செய்யவேண்டும் என்று பல ஆண்டுகளாக நான் கூறி வந்திருக்கிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.